Case No.STC.No.138/2022 மசா.1 சசிகுமார் த/பெ. பாபு வயது 36 09.06.2023

(எதிரீ ஆஜரில்லை எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது)

சாட்சியை மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

நான் எதிரிக்கு பணத்தை கொடுக்கும்போது யாரும் இல்லைஎன்று சொல்லி தான் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரையும் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி நான் நடத்திய சீட்டை 15.04.2021 ம் தேதி ஏல சீட்டை எடுத்துக்கெண்டார்கள் என்றால் ' அது சரியல்ல. சீட்டை எடுத்தற்காக பணத்தை எதிரி கேட்டபோது நான் வீட்டு பத்திரம் அல்லது காசோலை தரவேண்டும் என்று கூறியதின் அடிப்படையில் தான் எதிரி என்னிடம் 19.04.2021 ம் தேதியில 2 காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி 2 காசோகைளில் ஒரு காசோலை 3,00,000த்திற்கும் ஒரு காசேலை 1,00,000த்திற்கும் என்று இரு காசோலைகளை நிறப்படாமல் என்னிடம் கொடுத்தார் என்றால் அது சரியல்ல. நான் இரண்டு காசோலைகளை எதிரியிடம் பெற்றுக்கொண்டதற்காக ரெக்கார்ட் சிலீப்பை பெற்றுக்கொணடு கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. இவ்வழக்கின் காசோலை என்னவென்றால் 642177 ஆகும். மற்றொரு காசோலையான 642176 என்ற காசோலை என்னிடம்தான் உள்ளது என்றால் சரியல்ல.

நான் எனது முதல் விசாரணையில் கூலிவேலை செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில் ஆனால் நான் வெங்கடேஸ்வரா ஆட்டோ பைனான்ஸ் என்ற நிறுவனத்தின் மேனேஜிங் பார்னடராக உள்ளேன் என்றால் 5 வருடத்திற்கு முன்னாள் நான் இருந்தேன். தற்போது இல்லை. 2019 முதல் 2021 ம் ஆண்டு வரை நான் நடத்திய ஏலச்சீட்டிற்கு பணம் பெற்றுக்கொண்டு அதற்காக கொடுக்கப்பட்ட ரசீதுகளில் வெங்கடேஸ்வரா ஆட்டோ பைனான்ஸ் என்ற நிறுவனத்தின் மேனேஜிங் பார்னடராக இருந்த முத்திரை தாளை தான் பதித்து கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த ரசீதுகளிலும் மற்றும் ரெக்கார்டு சிலீப்புகளிலும் கையெழுத்துக்கள் இல்லை என்று சாட்சியம் அளிததுள்ள நிலையில் அதை கையெழுத்து நிருபுணருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. நிறப்பப்படாத காசோலையை நான் தான் நிறப்பிக்கொண்டேன் அதனால் காசோலையையும் கையெழுத்து நிருபுணருக்கு அனுப்ப ஆட்சேபனை உண்டா என்றால் இல்லை.

நான் ஏலச்சீட்டு நடத்தி எதிரியிடமிருந்து காசோலையை பெற்று அவரை ஏமாற்றி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரி என்னிடம் ரூபாய் 5,00,000த்தை கடனாக பெறவிலலை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் பணம் கொடுத்துஇருந்தால் யாராவது முன்னிலையில் பணம் கொடுத்துஇருப்பேன் எனது வீட்டில் இருந்த எனதுமனைவி சமைத்துக்கொண்டு இருந்தார் அப்போது அதனால் நான் பணத்தை கொடுத்தேன். நான் பணம் பெற்றுக்கொணடு அதற்கான கால அவகாசம் முடிவடைந்த நிலையில் அன்றைய தேதியில் பணம்கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேனா என்றால் இல்லை.

எதிரி ராஜன் 3,00,000த்திற்கும் அவரது அக்கா சுமதி 1,00,000த்திற்கும் என்னிடம் சீட்டிற்கு பணம் கட்டியதில் பாங்கி ரூபாய் 25,000ம் இருந்து வந்த நிலையில அவர்கள அதை கட்ட தயாராக இருந்த நிலையில அதனை நான் ஏற்றுக்கொள்ளாமல் இவ்வாறு ஒரு பொய்யான வழக்கை எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது சரியல்ல. நான் நடத்தியதாக சொல்லப்படும் வெங்கடேஸ்வரா ஆட்டோ பைனான்ஸ் நடத்துவதற்கு தகுந்த உரிமம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். நான் பெற்ற உரிமத்தை ரத்து செய்து கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்./-) சசிகுமார்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.